அக்டோபர் 2013

திருவள்ளுவர் ஆண்டு 2044

செந்தமிழ்

தொகுதி : 57
பகுதி : 12

திங்கள் இதழ்

விலை ரூ. 10/-

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு



மதுரைத் தமிழ்ச்சங்கம்,
செந்தமிழ்க் கல்லூரியும்,
காரைக்குடி கம்பன் கழகமும் இணைந்து
19.10.2013 அன்று நடத்திய
கம்பனில் புத்தம் புது (திறனாய்வுக்)
கலைகள் என்னும் கம்பராமாயண
ஆய்வரங்கைச்
செந்தமிழ்க் கல்லூரிச் செயலர்
திருமிகு. கோச்சடை இரா. குருசாமி அவர்கள்
குத்துவிளக்கேற்றித் தொடங்கி வைத்தார்.
அவருடன் மதுரைத் தமிழ்ச்சங்கச்
செயலர் திருமிகு. இரா. அழகுமலை அவர்கள்,
கல்லூரித் தலைவர்
திருமிகு. சு. வீரணசாமி அவர்கள்,
கல்லூரி முதல்வர் (பொ.)
முனைவர் மு. மீனா அவர்கள்

செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 57 திங்கள் இதழ்

பகுதி : 12 திருவள்ளுவர் ஆண்டு 2044

அக்டோபர் 2013

வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867-02.12.1911

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	ரூ. 100	ரூ. 600
ஆயுள் கட்டணம்	ரூ. 1000	
புரவலர் கட்டணம்	ரூ. 5000	ரூ. 6000
தனி இதழ்க் கட்டணம்	ரூ. 10	

ஆசிரியர்

இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,

செயலாளர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்,

மதுரை.

பொருளடக்கம்

பாரதிதாசனின் கவிதை மொழிபெயர்ப்பில் உவமை – ஒரு பார்வை	உமாதேவி அழகிரி	4
தரணியில் உயர்ந்து நிற்கும் எங்கள் சொத்து	கோவை, கூலவாணிகர் இரா. சொ. இராமசாமி	11
காரைக்காலம்மையாரின் அற்புதத் திருவந்தாதியில் சைவ சித்தாந்தம்	மு. செல்வக்குமார்	12
குறவஞ்சி காட்டும் மலைவளம்	முனைவர் கடவூர் மணிமாறன்	18
தமிழ் விருந்தில் திராவிட மொழிச் சிந்தனைகள்	முனைவர் பா. நேருஜி	23
பசி	ஆறுவிரல் ஐம்பொறி	31
திருவள்ளுவரும் திருமூலரும் காட்டும் அன்பு நெறி	பா. இளவரசி	33

இதழ் மணம்

அன்புடையீர் !

கல்விக் கடவுளாம் கலைமகள் திருவிழா வாழ்த்துக்களோடு இந்த மாத இதழ் வெளிவருகின்றது. பாரதிதாசனின் கவிதைகளில் உள்ள உவமைகள் மொழிபெயர்ப்பில் காணப்படும் நிறைகுறைகளை திருமதி. உமாதேவி அழகிரி வெளிக்காட்டியுள்ளமை பாராட்டிற்குரியது.

பயன்தரு மரங்களுள் ஒன்றான பனைமரம், தமிழர்களின் வாழ்வாதாரமாக விளங்குவதை, கோவை, கூலவாணிகர் இரா. சொ. இராமசாமி அவர்கள் தம் கவிதையில் சிறப்புற படைத்துக் காட்டியுள்ளார்.

காரைக்காலம்மையாரின் அற்புதத் திருவந்தாதியில் சைவ சித்தாந்தம் என்னும் கட்டுரை சைவ சித்தாந்தக் கருத்துக்களைப் படிப்பவர் புரிந்துகொள்ளும் வண்ணம் அமைந்துள்ளது.

திருக்குற்றால மலை வளத்தைத் திருகூடராசப்பர் குறவஞ்சி வழியாகக் காட்டியுள்ள கட்டுரை படித்து இன்புறத்தக்கது.

இரா.பி. சேதுப்பிள்ளையின் தமிழ்விருந்தில் சுட்டப்பட்டுள்ள திராவிட மொழிச் சிந்தனைகளை முனைவர் பா. நேருஜி சிறப்புற எடுத்துக்காட்டியுள்ளார்.

திருக்குறளில் அமைந்துள்ள வாழ்வியல் கருத்துக்களை நுட்பமாக ஆராய்ந்து செந்தமிழ் இதழில் தொடர்ந்து, எழுதிவரும் ஆறுவிரல் ஐம்பொறி அவர்கள், இந்த இதழில் பசித்திருப்போருக்கு உண்டி கொடுத்து அவர் பசியை ஆற்றுதல் வள்ளுவர் காட்டும் நெறி என்பதை எளிமையாக எடுத்துக்காட்டியுள்ளார்.

திருவள்ளுவரும் திருமூலரும் காட்டும் அன்புநெறியைத் திருமதி. பா. இளவரசி ஒப்பியல் நோக்கில் ஆராய்ந்துள்ளமை பாராட்டிற்குரியது.

தமிழ்மொழி மற்றும் இலக்கியங்களை நுட்பமாக ஆராயும் கட்டுரைகளோடு அக்டோபர் மாத இதழ் மகிழ்வோடு தங்களின் கையில் தவழ்கிறது.

ஆசிரியர்

பாரதிதாசனின் கவிதை மொழிபெயர்ப்பில் உவமை - ஒரு பார்வை

(சென்ற இதழ் தொடர்ச்சி)

உமாதேவி அழகிரி
மொரீசியசு

இனி உருக்கான உவமைகள் நோக்கத்தக்கன.

1.3.3. சஞ்சீவி பர்வதத்தின் சாரல்

சஞ்சீவிப் பர்வதத்தின் சாரலை வருணிக்கும் போது,

"கண்ணாடி போன்ற நீர் ஊற்றுக்கள் உண்டு" என்று அச்சாரலின் வளத்தையும் தண்ணீரின் தூய்மையையும் எடுத்தியம்புகிறார் பாவேந்தர். இவ்வடிகளுக்கான இரு மொழி பெயர்ப்புகளாக,

"mirror-like streams" என்றும்

"springs of specular water abound" என்றும் அமைந்துள்ளன.

ஊற்றுக்கள் என்பதற்கு "streams" மற்றும் "springs" என ஆங்கில மொழி நிகரன்கள் தரப்பட்டுள்ளன.

"கண்ணாடி போன்ற" என்ற தமிழ்த் தொடருக்கு "mirror-like" என்று உள்ளதை உள்ளவாறே அமைத்து மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இரண்டாம் மொழி பெயர்ப்பில் "specular water" என்று ஊற்றில் தண்ணீர் அமைந்துள்ள இயல்பான விதத்தை எடுத்துக் கூறும்படி அமைந்துள்ளதைக் காணலாம்.

1.3.4. பாண்டியன் பரிசு

"கிளிக்கழுத்தின் பொன்வரிபோல் அரும்பும் மீசை !

கீழ்க்கடலின் மாலைவெயில் கலந்த நீல

ஒளித்திரை போல் தலைமயிர்சிங் கத்தின் தோற்றம்"

என்று வேலன் என்ற கதாநாயகனை வருணிக்கும்படி அமைந்துள்ளது.

இவ்வரிகளுக்கான ஒலி பெயர்ப்புகளைத் தருவதோடு இவற்றிற்குரிய ஆங்கில மொழி பெயர்ப்பு நிகரன்களாவன,

"Like a thin gold streak around a parrot's neck,
He had a budding moustache; his thick hair
Was reddish blue like the evening sky" என்பது ஆகும்.

'பொன்வரி போல்' என்பதற்கு "like a thin gold' என ஆங்கில நிகரனாக வழங்கப்பட்டுள்ளது. "கீழ்க்கடலின் மாலைவெயில் கலந்த நீல ஒளித்திரை போல்" என்பதற்கு "reddish blue like the evening sky" என மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

வரி என்பதற்கு "thin" என்ற சொல் ஆங்கில மொழி பெயர்ப்பாகத் தரப்பட்டுள்ளது. பொன்வரி போல் என்பதற்கு "like a golden ray" என்று மொழி பெயர்த்தால் இன்னும் பொருத்தமாக அமைந்திருக்கும். கீழ்க்கடலின் மாலைவெயில் கலந்த நீல ஒளித்திரை போல் என்ற தொடரின் பொருளை ஆழ்ந்துணர்ந்து வேற்று மொழியில் அதனைத் தெளிவாக உணர்த்தும் வகையில் மொழி பெயர்ப்பாளர் அளித்துள்ள மொழி பெயர்ப்புப் பொருத்தமாக அமைந்துள்ளது.

பயன் உவமைகள் இரண்டு பின்வருமாறு ஆராயப்பட்டுள்ளன.

1.3.5. மாணவர்க்கு எழுச்சி

"சித்திரம் பயின்று வா
தேன் போன்று கதை சொல்
முத்தைப் போல் துவைத்த உடையணிவாய்
புத்தகம் உனக்குப் புத்துயிர் அல்லவா?"

இதற்கான ஆங்கில மொழி பெயர்ப்புகள் மூன்று பின்வருமாறு,

"Go about learning painting,
Tell the tales honeyed,
Wear the clothes washed pearl like;
Are not books things invirogating?
Need I to tell you that they must not be lost?
"Practice painting

And the art of story - tellling;
Wear clean robes, pearl - white;
Books are your life - giving force;
Neglect them not ! Need I your advise?
"Practice the art of drawing
And to tell stories sweet:
And your appeal sparkle like the pearl
Are not books your life - giving force?
Never lose them! Need I tell you this"

'மாணவர்க்கு எழுச்சி' என்னும் கவிதைப் பகுதியில் 'சித்திரம் பயின்று வா, தேன் போன்று கதை சொல்' என்றும் 'முத்தைப் போல் துவைத்த உடையணிவாய்!' என்றும் இரு உவமைகள் அமைந்துள்ளன.

"Go about learning painting,
Tell the tales honeyed",
"Practice painting
And the art of story - telling
"Practice the art of drawing
And to tell stories sweet"

என்பனவற்றை நோக்கும் போது 'go about learning painting' என்பது மூலத்தை ஒத்த சொல் நிரலாகவே மொழி பெயர்க்கப்பட்டுள்ளது; இரண்டாம் மொழி பெயர்ப்பில் சித்திரம் பயிலவும் எனவும் மூன்றாம் மொழி பெயர்ப்பில் சித்திரம் என்ற கலையைப் பயிலவும் என்று அமைந்துள்ளன; முதல் மற்றும் மூன்றாம் மொழி பெயர்ப்புகளில் 'tell the tales honeyed' என்றும் 'and to tell stories sweet' தேன் போன்று கதை சொல் என்பதற்கு மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இரண்டாம் மொழி பெயர்ப்பில் இவ்வுவமை மொழி பெயர்க்கப்படவில்லை.

"wear clean robes, pearl-white"
"let your apparel sparkle like the pearl"

"wear the clothes washed pearl like" என்பவை முத்தைப் போல் துவைத்த உடையணிவாய் என்பதற்கான மொழி பெயர்ப்புகள் ஆகும். முதல்

மொழி பெயர்ப்பே மூலத்தை ஒத்ததாக அமைந்துள்ளது. இரண்டாம் மற்றும் மூன்றாம் மொழி பெயர்ப்புகளில் 'முத்தைப் போல்' என்பதற்கு 'like the pearl' என்றும் 'pearl like" என்றும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

1.3.6. கூறையில் ஓடம்

"சிற்றலையின் வரிசையிலே
சேல்மீன்கள் விளையாடும்
முற்றி விட்ட பகைபோல
முதலை ஒன்று குறுக்கோடும்"

என்பது பாரதிதாசன் படைத்துள்ள மிக நீண்ட கவிதைக்கான பகுதி ஒன்று ஆகும். இவ்வடிகளின் மொழி பெயர்ப்புகள் கீழ்க்கண்டவாறு,

"In the ripples of water along
The cel fish move sporting about,
A crocodile there goes across
As if one of rooted malice"

"Fishes frisk about
In the tiny waves arranged
A crocodile crosses,
As in enemity rife?"

"In the row of ripples
The fishes play
A crocodile runs across
Like ripened enemity"

சிற்றலையின் வரிசையிலே சேல்மீன்கள் (கெண்டை மீன்கள்) இன்பத்துடன் விளையாடிக் கொண்டிருக்கும் போது பல நாட்களாகப் பகைமை கொண்ட முதலை ஒன்று வீரென்று குறுக்கே வந்தது, முற்றிவிட்ட பகை போல என்று உவமையாக அமைந்துள்ளது. இதற்கு, 'as if or rooted malice' அடியோடு கெடுக்கும் நோக்கம் கொண்டு முதலை குறுக்கே வந்துள்ளது என்றும், மிக எதிர்ப்பு எண்ணத்துடன் அது குறுக்கியது என்றும், முதிர்ந்த பகை உண்டு குறுக்கியது என்றும் மொழி பெயர்ப்பாளர்கள் கருத்தாகக் கொண்டு மொழி பெயர்த்துள்ளார்கள்.

முதல் மொழி பெயர்ப்பான,

"a crocodile there goes across

As if one of rooted malice" என்று சரியான மொழி பெயர்ப்பாக அமைகிறது.

மெய் உவமைகளுக்கான இரு சான்றுகள் பின்வருமாறு அமைகின்றன.

1.3.7. சஞ்சீவி பர்வதத்தின் சாரல்

குப்பன் மற்றும் வஞ்சி ஆகிய காதலர்கள் மலையிலிருந்து மலைச்சாரலுக்கு வர நினைக்கிறார்கள். காதலியின் நிலையையும் அவள் காதலனிடம் கூறுவதையும் காட்டுகின்றார் கவிஞர்.

"தென்றலிலே மெல்லச் சிலிர்க்கும் மலர்போலே
கன்னி யுடல் சிலிர்க்கக் காதலரே நாம் விரைவாய்ச்
சாரலும் தண்மாலை நாயகியைச் சாரக்
குயில் கூவிக் கொண்டிருக்கும்."

மேற்காணும் அடிகள்

"her hair shivered slight
Like the blossoms in the breeze
And she said
'O my darling! Let us rush up to the hillside !
It is the proper place to make love!
The hill side too will meet his mistress of evening
There, the cuckoo will be singing" என்றும்,

"As flowers quiver soft in gentle breeze
The lass, thrilled in joy, fondly said;
'let us race downhill, a loveable place !
The slope too will now enjoy the subtle game
Of the cool and colourful eve, its love loss!
There the cuckoos warble dulcet notes" என்றும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

மென்மையான மலரை மெல்லியலாருக்கு உவமையாக்குவது கவி மரபு. தென்றல் வீசும் போது சில மலர்கள் மெல்ல சிலிர்த்து மலரும். இங்குக் காதலர்களும் திரும்பும் நேரம் மாலை நேரம். இப்பொழுது வள்ளியின் மேனி சிலிர்ப்பதாகக் காட்டுகிறார்.

"தென்றலிலே மெல்லச் சிலிர்க்கும் மலர்போலே

கன்னி யுடல் சிலிர்க்க" என்பதன் ஆங்கில மொழி பெயர்ப்புகள்,

"Her hair shivered slight

Like the blossoms in the breeze" என்றும்,

'As flowers quiver soft in gentle breeze' என்றும் அமைகின்றன.

மூலத்தில் உடல் சிலிர்க்க என்று உள்ளது. ஆனால் முதல் மொழி பெயர்ப்பில் 'her hair shivered' என்று இருப்பதைக் காணலாம். இரண்டாம் மொழி பெயர்ப்பில் இத்தொடர் மொழி பெயர்க்கப்படாமல் விடப்பட்டுள்ளது.

1.3.8. பாண்டியன் பரிசு

பாண்டியன் பரிசுக் காப்பியத் தலைவன் வேலவனின் தாயான ஆத்தா தங்கியிருந்த குடிசையை எதிரிகள் சூழ்கிறார்கள். அப்போது குதிரைமேல் வந்த வேலன் பெருவாளுடன் பாய்வதைக் கவிஞர்,

"பலகுதிரை மறவரின் மேல் வேலன் எட்டிப்

பாய்ந்தனன் பல் ஆடுகட்குள் வேங்கை போலே!

என்று காட்டுவார். வேங்கை ஆட்டுக் கூட்டத்திற்குள் பாய்வதுபோல் வேலன் பகைவர் கூட்டத்தில் பாய்ந்தான் என்று கூறுவதிலே வேலனின் வெற்றியானது குறிப்பாகக் காட்டப் பெறுகிறது. இவ்வடிகள்,

'It was like the prowling charge of a panther

At the defenceless herd of hapless sheep!' என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

இது நல்ல கற்பனை நயத்துடன் மூல உவமைக்கு உண்மையாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளது எனலாம். வேலனின் வீரத்தைப் புலப்படுத்த 'prowling charge' என்றும் பகைவரின் வீரமின்மையைச் சுட்டிக் காட்ட 'defenceless herd of hapless sheep' என்றும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

முடிவுரை

பாரதிதாசன் கற்பனைத் திறம் வேறொருவருக்கும் வாய்க்காத ஒன்றாக அமைந்துள்ளது. தம் அடிமனத்தில் தோன்றியுள்ள கருத்துகளைச் செவ்வனே எடுத்துக் கூறப் பல பொருத்தமானதும் அழகானதுமான உவமைத் தொடர்களைப் பயன்படுத்தியுள்ளார். மொழி பெயர்ப்பின் போது பல நிலைகளில் சிக்கல்கள் தோன்றுவது உண்டு. அவை உவமைத் தொடர்களின் மொழி பெயர்ப்பின் போது எழுகின்றன. இரு மொழிகளுக்கிடையிலுள்ள நல்ல உகந்த உவமை இல்லாவிட்டால் மூல மொழியிலுள்ள கருத்தோட்டத்தைத் தரும் மொழியில் கொணர வாய்ப்பில்லை. ஆனால் பெரும்பாலான மொழி பெயர்ப்பாளர்கள் தங்கள் அனுபவங்களையும் திறனையும் பயிற்சியையும் அடிப்படையாகக் கொண்டு உவமைத் தொடர்களுக்கு மூலத்துக்கு ஒத்த நிகரன்களைத் தேர்ந்தெடுத்து மொழி பெயர்ப்புப் பணியில் ஈடுபட்டுள்ளார்கள். இக்கட்டுரையின் வழி சில உவமைத் தொடர்கள் மூலத்துக்கு ஒத்ததாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளதும், சில உவமைகள் மொழி பெயர்ப்பாளர்களால் விடப்பட்டதும் புலப்படுகிறது.

வாசகர் வாசகம்

அன்புடையீர், வணக்கம்.

செப்டம்பர் 2013 திங்கள் இதழ் "செந்தமிழ்" படித்தேன். ஐயா ஆறுவிரல் ஐம்பொறி அவர்களின் 'ஆல்' எனும் கட்டுரையில், திருக்குறட்பாக்களிலிருந்து சில சீர்கள் (சொற்கள்) எடுத்துக்காட்டாகத் தரப்பட்டுள்ளன. குறள் எண். 256-இன் சீர்கள் இரண்டு, பக்கம் 14-இல் (வரி 4-இல்) குறிப்பிடப்பட்டுள்ளன.

தினப்பொருட்டால், விலைப் பொருட்டால் - 256 இதில் குறிப்பிட்டுள்ள முதல் சீர் (சொல்) **தினப் பொருட்டால்** என்பது சரியோ என ஐயமாக உள்ளது. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட். வெளியிட்டுள்ள (ஆசிரியர்-குறிஞ்சிச் செல்வர் டாக்டர் கொ.மா. கோதண்டம்) 'திருக்குறள் - இளைஞர்களுக்கான எளிய உரை' எனும் நூலில் **தினல் பொருட்டால்** என்று உள்ளது. நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா வெளியிட்டுள்ள (ஆசிரியர் நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை) 'திருக்குறள் - மூலமும் உரையும்' எனும் நூலில் தினற் பொருட்டால் என்று உள்ளது. இவ்வாறெனில், தி னப்பொருட்டால் என்று செந்தமிழ் இதழில் வெளியிட்டுள்ளது சரியா? என்று ஐயம் ஏற்படுகிறது. அன்பு கூர்ந்து இதை விளக்க வேண்டுகிறேன்.

இப்படிக்கு,
வீ.கி. இராமநாதன்

ஆசிரியர் குறிப்பு : தினற் பொருட்டால் என்பதே சரியானது. கட்டுரையாளரின் தவறைச் சுட்டிக் காட்டியமைக்கு நன்றி - ஆசிரியர்

தரணியில் உயர்ந்து நிற்கும் எங்கள் சொத்து

கோவை, கூலவாணிகர் இரா. சொ. இராமசாமி

பண்டையத் தமிழருக்கு
பன்னெடுங் காலமாய்
பழமைக் குணம் மாறா நிலையே
பயன் ஈந்தே வரும் பனையே

பரந்த உலகில் வாழும் மனிதர்கள் உனை
முழுமையாய் அறிந்தோர்
அவனியில் விடுவாருண்டோ
தமிழரின் வாழ்வாதாரமாம்

ஈடு இணையில்லா பனைமரமே
மூத்த தமிழ்க்குடிகள் வளமே – நீ
தமிழருடைய முகவரியே – நீ
கோடை, குளிர், கார், வேனில் பருவ காலங்களில்

தாயின் மடியாய் தந்துதவி
மனிதர்களை வாழவைக்கிறாய்
உன் பயனறிந்து வாழ்வோருக்கு
பிணிகள் எதுவும் பிடிப்பதில்லை

பனையே பயனாய் பயன்படுகிறாய்
உன் பயனறியார் உனை நாடி பயன்பெறார்
இயற்கைப் பயனாம் மண்ணில் – நீ
வந்த வரமாம் மாமருந்தாய் தருகிறாய் .

மனிதர்கள் மணியாய் உனை
எண்ணி வளர்ப்பதில்லை – நீ
மனிதர்கள் நலன் எண்ணியே
வளர்கிறாய், மண்ணே உன் தாய்.

உனை தடைசெய்ய முடியா வித்து
யாரும் தரமுடியா விலையில்லா சத்து
நீரின்றி தானாய் முளைத்து வளரும் முத்து
தரணியில் உயர்ந்து நிற்கும் எங்கள் சொத்து.

காரைக்காலம்மையாரின் அற்புதத் திருவந்தாதியில் சைவ சித்தாந்தம்

மு. செல்வக்குமார்
மதுரை

முன்னுரை

சைவத்தின் மேற்சமயம் வேறில்லை; அதிற்சார்
சிவமாம் தெய்வத்தின் மேல் தெய்வம் இல்

எனும் உறுதியோடு வாழ்ந்தவர் காரைக்காலம்மையார். மெய்யறிவு கைவரப் பெற்ற காரைக்காலம்மையார் முதன் முதலாகப் பாடியருளியது இவ்அற்புதத் திருவந்தாதி என்பர். அற்புதத்திருவந்தாதி புதுமையான போக்குடையது. இவ் அந்தாதியின் சிறப்பை நோக்கியே சான்றோர் இவ்வந்தாதிக்கு அற்புதத் திருவந்தாதி என்று பெயரிட்டு வழங்கினர். அறிதற்கரிய சிவஞானத்தின் இயல்பைத் தெளிவாக விளக்குவது, மெய்யன்போடு ஓதுவோர் உள்ளத்தை இவ்வந்தாதி உருக்கும் இயல்புடையது. இவர் பாடல்களில் கூத்த பெருமான் ஆடற் சிறப்பும் வருணனையும் பெரிதும் பேசப்படுகின்றன.

காரைக்காலம்மையார்

காரைக்காலம்மையார் சேனாட்டுக் காரைக்காலில் தோன்றியவர். இவரது இயற்பெயர் புனிதவதி, அறுபத்து மூவரில் ஒருவர். எம்பெருமானை வேண்டிப் பேயுருப்பெற்று, கயிலை மீது தலையாலேயே நடந்து, இறைவனால் அம்மையே என்று அழைக்கப்பெறும் பேறு பெற்றவர். ஏனையோர் ஆலயங்களில் நின்ற கோலத்தில் இருக்க, அம்மையார் மட்டும் அமர்ந்த கோலத்தில் காணப்படுகிறார். இறுதிக் காலத்தில் திருவாலங்காட்டில் இறவாநிலை எய்தினார்.

திருவாலவாயுடையாரின் திருமுகப்பாசுரம், புழுவாகப் பிறக்கினும் புண்ணியா ! நின்னடி வழுவாதிருக்க வேண்டுமென வரம் வேண்டிய அம்மையாரின் திருப்பதிகங்கள் நான்கு (திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் – 2, திருவிரட்டை மணிமாலை – 1, அற்புதத் திருவந்தாதி – 1) ஆகும்.

சைவ சித்தாந்தம்

சைவ சமயத்தை ஆய்ந்து முடிவு செய்துள்ள மெய்யறிவின் தொகுப்பு சைவ சித்தாந்தம் ஆகும்.

சைவம் என்ற சொல் சிவத்தோடு சம்பந்தம் உடையது என்றும் சிவபெருமானே முழு முதற்கடவுள் என்றும் கூறப்படுகிறது. சைவ சித்தாந்தம் என்றால் முடிந்த முடிபு என்று பொருள்.

வேதமும் ஆகமமும் அவன் அருளில் செய்த முதல் நூல் ஆகும். அவற்றுள் வேதம் பொது, ஆகமம் சிறப்பு என்றும்; விபூதி, உருத்திராக்கம் ஆகியவை சிவச்சின்னங்கள் என்றும் திருவைந்தெழுத்தே மூலமந்திரம் என்றும்; சிவலிங்க வழிபாடே மேலான வழிபாடு என்றும், அவ்வழிபாட்டைச் சிவாகமத்தில் கூறியுள்ளபடி குருமூலமாக உபதேசம் பெற்றுச் செய்வதே சிறப்பு என்றும் நினைந்து அவ்வண்ணமே ஒழுகும் நெறி சைவ சமயம் எனப்படும். சைவ சமயத்தின் கொள்கைகளைக் காட்டுவது சைவ சித்தாந்தம் என்னும் கோட்பாடு ஆகும். இச்சமயத்தின் அடிப்படைக் கொள்கைகளை விளக்குவதுடன் நுண்பொருட்களையும் உணர்த்துகிறது. சைவ சமயம் சாத்திரம், தோத்திரம் என இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது.

சைவ சித்தாந்தம் பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள்களைப் பற்றிக் கூறுகின்றது. முப்பொருள்களுக்கும் பொது, சிறப்பு என்ற இரு இயல்புகளைக் கூறுகிறது. இறைவனை எளிதில் எய்துவதற்குரிய நெறி சைவ சித்தாந்த நெறியே ஆகும். உயிர்கள் ஈடேற்றம் பெற, உரிய வழி முறைகளைக் கூறுகின்றது. சமயக்குரவர் நால்வர் பாடிய பதிகங்களுள் சித்தாந்தம் பற்றிய செய்திகள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

அற்புதத் திருவந்தாதியில் சைவ சித்தாந்தம்

இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படரும் நெறிபணியா ரேனும்

சிவபெருமான் எம்முடைய இடரைக் களையார் என்றாலும், எம்பால் இரங்காமல் இருந்தார் என்றாலும் நாங்கள் செல்ல வேண்டிய வழியைக் காட்டாராயினும் சோதி வடிவமுள்ள தம் திருமேனியில் எலும்பு மாலை எப்போதும் நீங்காமல் இருக்கும் கோலத்தோடு தீயைத் திருக்கையிலேந்தி

ஆடுகிற எம் தலைவருக்கு என் அன்பு என்றும் ஆறாது. என் நெஞ்சு சிவபெருமானுக்கே உரியது என்கிறார் அம்மையார். இடர் என்பது ஆணவ மலத்தின் உயிரானது அல்லல்படும் நிலையினைக் குறிக்கிறது. உயிர்களின் ஆணவ மலத்தைக் களைபவர் பதியாகிய இறைவனேயாகும்.

எல்லாம் அவன் அருளே

அருளே, உலகெல்லாம் ஆள்விப்ப தீசன்
அருளே பிறப்பறுப்ப தானால் – அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன்; எஞ்ஞான்றும்
எப்பொருளும் ஆவ தெனக்கு

பிறருக்கெல்லாம் சிறந்த பதவிகளைக் கொடுத்துப் பலவகை உலகங்களை ஆள்விப்பது இறைவன் அருளே. அந்த அருளே பிறப்பை அறுத்து முத்தி தருவது. நானோ அவன் அருளாலே உண்மையான பொருளைக் காணும் நியமத்தை உடையவள் ஆதலால் அவன் அருளே, எனக்கு எல்லாக் காலத்தும் எல்லாப் பொருளும் ஆவது.

இருமையிலும் இன்பம்

சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் என்பன மூன்று வகை வினைகள், இவற்றில் நாம் செய்த பழவினைகளின் குவியலுக்குச் சஞ்சிதம் (பழவினை) என்று பெயர். இத்தகு பிறவியில் அனுபவிக்க வாய்ந்த பகுதிக்கு பிராரத்தம் என்று பெயர். இங்கே செய்யும் புதிய வினைக்கு ஆகாமியம் என்று பெயர்.

இறைவன் அடியை இடைவிடாது சிந்திப்பார்க்கு இம்மை இன்பமும், மறுமை இன்பமும் எய்தும்.

காண்பவர் மூவர்

காண்பார்க்கும் காணலாம் தன்மையனே கைதொழுது
காண்பார்க்கும் காணலாம் காதலால் காண்பார்க்குச்
சோதியாய்ச் சிந்தையுளே தோன்றுமே தொல்லுலகுக்கு
ஆதியாய் நின்ற அரன்

பழமையான உலகத்துக்கு மூலகாரணமாக நின்ற சிவபெருமான், வடிவத்தை

மட்டும் காண்பவர்களுக்கும் காணத்தக்க இயல்புடையவன். அன்பினால் இவன் நம் இறைவன் என்று எண்ணிக் கைதொழுது காணும் பக்தர்களுக்கும் காணுதல் கூடும். உள்ளே நிறைந்த பேரன்பால் காண்கின்றவர்களுக்கும் அவர்களுடைய சித்தத்துக்குள்ளே சோதிமயமாகக் காட்சி அளிப்பான். முதல் நிலையினர் பொதுமக்கள், அடுத்த நிலையினர் பக்தர், கடைசியில் வருகிறவர் அநுபூதிமான்.

எல்லாம் அவனே

அறிவானும் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே – அறிகின்ற
மெய்ப்பொருளும் தானே விரிசுடர்பார் ஆகாயம்
அப்பொருளும் தானே அவன்.

இறைவன் எல்லாவற்றையும் அறிபவனும் தானாக இருக்கிறான். உயிர்களுக்கு அறிவிப்பவனும் அவனாகவே இருக்கிறான். அறிவாகவும் அறிகின்றவனாகவும் தானே ; அறிகின்ற மெய்ப்பொருளும் அவனே ; விரிந்த சுடரும் விரிந்த உலகமும் விரிந்த ஆகாயமும் ஆகிய அப்பொருள்களும் அவன்.

அட்டமூர்த்தி

அவனே இருசுடர்தீ ஆகாசம் ஆவான்
அவனே புவிபுனல்காற் றாவான் – அவனே
இயமான னாய்அட்ட மூர்த்தியுமாய் ஞான
மயனாகி நின்றானும் வந்து

சிவபெருமான் அட்டமூர்த்தியாக விளங்குகிறான். அட்டமூர்த்தி என்பது மண், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், உயிர் என்ற எட்டுமாம். ஞானமயமாக இறைவன் காட்சி தருகிறான்.

இறைவனை அடையும் திரு

திறத்தான் மடநெஞ்சே சென்றடைவ தல்லால்
பெத்தானும் ஆதியோ பேதாய் – நிறத்த
இருவடிக்கண் ஏழைக் கொருபாகம் ஈந்தான்
திருவடிக்கண் சேரும் திரு

இயல்பாகவே மடமையையுடைய நெஞ்சே, சொன்னாலும் புரிந்து கொள்ளாத பேதைமையுடைய மனமே, நல்ல வண்ணமுடைய இரண்டு மாவடுவின் பிளப்பைப் போன்ற திருவிழிகளையுடைய பெண்ணாகிய அம்பிகைக்குத்தான் ஒரு பாகமாகிய இடப்பாகத்தை வழங்கினவனாகிய இறைவனுடைய திருவடியைச் சேர்ந்து இன்புறும் வளவாழ்வு, அதற்குரிய தகுதியோடு அதனைப் பெறவேண்டும் என்ற ஏக்கத்தோடு எல்லாவற்றையும் விட்டொழித்து அதனையே நாடிச்சென்று அடைவதெல்லாம் இருந்த இடத்தில் இருந்தபடியே பெறுவதற்கு நீ தகுதியுடைய ஆவாயோ? என்று கேட்கிறார் அம்மையார்.

எந்த உருவம்

அன்றும் திருவுருவும் காணாதே ஆட்பட்டேன்
இன்றும் திருவுருவம் காண்கிலேன் – என்றும் தான்
எவ்வுருவோ நும்பிரான் என்பார்கட் கென்றுரைக்கேன்
எவ்வுருவோ நின்னுருவம் ஏது

எம்பெருமானே, உன்னை வழிபடத் தொடங்கிய அந்தக் காலத்திலும் உன்னுடைய இயல்பான திருவுருவத்தைக் காணாமலே உனக்கு அடிமையானேன். உன்னுடைய திருவருளால் உன் அருள் அனுபவத்தைப் பெற்று நிற்கும் இப்போதும் உன் திருவுருவத்தை நான் காணவில்லை.

கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்

ஆண்டவனுடைய திருவுருவத்தைக் கண்டவர்கள் மற்றவர்களுக்குச் சொல்லமுடியாது. சொல்பவர்கள் யாரும் இறைவனின் உண்மையான திருவுருவத்தைக் காணமுடியாது. ஏனென்றால் இந்த உலகத்தில் இறைவன் தன் உண்மையான திருவுருவத்தைக் காட்டமாட்டான். எல்லா வடிவமாகவும் நின்று காட்சி தருபவன் இறைவன். நேரிலே கண்டுவிட்டால் அவன் இறைவன் ஆகமாட்டான். என்றும் தன் உருவத்தை மறைத்து வைத்து உயிர்களுக்கு அருள்புரிபவன் இறைவன்.

அடியவர்களின் பெருமிதம்

பணிந்தும் படர்சடையான் பாதங்கள் போதால்
அணிந்தும் அணிந்தவரை ஏத்தத் – துணிந்தென்றும்

எந்தையார்க் காட்செய்யப் பெற்ற இதுகொலோ
சிந்தையார்க் குள்ள செருக்கு

படர்ந்த சடையை உடையவன் பாதங்களைப் பணிந்தும், அந்தத் திருவடிகளை அலரும் பருவத்துள்ள மலர்களால் அலங்கரித்தும், அப்பால் அவ்வாறு அலங்கரித்த அன்பர்களை ஏத்துவதே நல்ல நெறியென்று பணிந்து நின்றோம். அப்பால் என்றும் பிறழாமல் எம் தந்தையாராகிய சிவபெருமானுக்கு ஆளாகித் தொண்டு செய்யப் பெற்றோம். அவ்வாறு பெற்ற இந்த நிலைதானோ எம்முடைய சிந்தையார்க்குள்ள செருக்குக்குக் காரணம்.

உலகத்திலே பெரியது எதுவென்றால் இறைவனை என்றும் நினைந்து கொண்டிருக்கின்ற தொண்டர் தம் உள்ளமே என்று ஔவையார் கூறுவார். இறைவனை வணங்குவதும், இறைவனை எக்காலமும் நினைத்துக் கொண்டிருக்கும் அடியார்களை வணங்குவதும் ஒன்று என்று கருதிதான் திருநாவுக்கரசையே தன்குல தெய்வமாக வணங்கினார் அப்பூதியடிகளார். வைணவத்தில் நம்மாழ்வாரை வணங்கியவர் மதுரகவியாழ்வார்.

முடிவுகள்

மெய்யறிவு கைவரப் பெற்றவராய் விளங்கிய காரைக்காலம்மையார் அற்புதத் திருவந்தாதியில் பதி, பசு, பாசம் ஆகிய மூன்று கருத்துக்களையும் அழகாக எடுத்துரைக்கின்றார்.

இறைவனுடைய சோதி உருவக்காட்சி அனுபவ நிலைக்கு இட்டுச் செல்வது இவருடைய பாடலின் சிறப்பாகும்.

சைவ சமயத்தினை நிலை நாட்டுவதிலும் திருவந்தாதியில் எடுத்துரைப்பதும் மிகவும் சிறப்புடைய ஒன்றாகக் கருதப்படுகிறது.

கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர் என்ற கோட்பாடானது மிகவும் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

சைவ சித்தாந்தக் கருத்துக்கள் அற்புதத் திருவந்தாதியில் அடங்கியிருப்பது மிகவும் சாலப் பொருத்தமாக உள்ளது.

குறவஞ்சி காட்டும் மலைவளம்

முனைவர் கடவூர் மணிமாறன்
மாயனூர்

மனிதன் மரம் வளர்த்தால் மரம் மனிதனை வளர்க்கும் என்பது பொருள் பொதிந்த இக்காலப் பொன்மொழி. நெடிய மரங்களும் அடர்ந்த செடி, கொடிகளும், மேடு, பள்ளங்களும் நிறைந்த பகுதிகளே மலைகளாகக் காட்சி அளிக்கின்றன. மலையும் மலை சார்ந்த இடமுமே குறிஞ்சி நிலமாகும். ஐவகை நிலங்களுள் முன்னது இது. வியக்கத்தக்க இயற்கை வளங்களுள் குறிப்பிடத்தக்கது மலைவளம் ஆகும். இதன் மாட்சியையும் எழில்மிகு காட்சியையும் பாடாத கவிஞர்களே இலர் எனலாம். தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்றாகிய குறவஞ்சியைச் சார்ந்த திருக்குற்றாலக் குறவஞ்சியைத் திரிகூடராசப்பக் கவிராயர் பாடியுள்ள திறமும் போற்றிப் புகழும் மலைவளமும் ஈண்டு ஆராயப் பெறுகின்றது.

அனைவருமே ஒருங்கே கூடி, உவந்து நாடிக் கற்பதற்கேற்றவாறு எளிமையும், இனிமையும், இசைமையும் பொருந்தப் படைக்கப்பட்டுள்ளது இந்நூல். திக்கெலாம் புகழ் கொண்ட குற்றாலச் சாரலின் பெருஞ்சிறப்பைத் திரிகூட ராசப்பக் கவிராயர் இந்நூலின் கண் புகழ்ந்துரைக்கின்றார். திரிகூடம் என்பது மூன்று மலை முடிகளையுடைய இடத்தைச் சுட்டுவதாகும். குறப்பெண் ஒருத்தியிடம் நின் மலைவளம் யாதெனக் கேட்டபோது அவள் விடையிறுக்கும் வகையில் இலக்கியம் நடையிடுகிறது.

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை அழைப்பர்
கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பர்
தேனருவித் திரைஎழும்பி வானின்வழி ஒழுகும்
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்
குற்றாலத் திரிகூட மலைஎங்கள் மலையே!

ஆண் குரங்குகள் பலவகையான பழங்களையும் பறித்துக் கொண்டு வந்து கொடுத்துத் தம் மந்திகளோடு கொஞ்சிக் கொண்டிருக்கும்; அப்போது

அம்மந்திகள் கீழே சிந்துகின்ற கனிகளுக்காக எதிர்பார்த்துத் தேவர்களும் கெஞ்சிக் கொண்டிருப்பார்கள். கானவராகிய வேடுவர்கள், தம் கண்களால் உறுத்து நோக்கி அந்த வானவர்களைக் கீழே வருமாறு அழைத்துக் கொண்டிருப்பார்கள். வானிலே இயங்கும் சித்தர்கள் பலரும் அடிக்கடி வந்து வந்து காயசித்தி மூலிகைகளை வளர்த்துக் கொண்டிருப்பார்கள்.

தேனருவியானது அலைகள் மேலே எழும்பிச் சென்று வானின் வழியாக ஒழுகிக் கொண்டிருக்க, அதனால் செங்கதிரோனின் தேர்க்குதிரைகளின் கால்களும் தேர்ச் சக்கரங்களும் வழுக்கி விழவும் நேரும். வளைந்த இளம்பிறையினைத் தம் சடையிலே முடிந்திருக்கும் அழகினையுடையவரான குற்றால நாதரின் அத்தகைய வளமுடைய திரிகூட மலையே எமதாகும் என அவள் விடை பகர்கின்றாள்.

மலைவளம்

மலைச்சாரல்களிலே கிழங்குகளைக் கிள்ளி எடுத்தும் தேன் இறால்களை எடுத்தும் மலைவளங்களைப் பாடியும் நாங்கள் நடனமாடுவோம். களிற்றியானைகளின் கொம்புகளை ஒடித்துக் கொணர்ந்து, பூண்கட்டி அதனாலே வறுத்த தினையினை உரலிலே இட்டு இடிப்போம். குரங்குகள் இனிய மாமரத்தின் வளமான பழங்களைப் பறித்துப் பறித்துப் பந்தாடும் போது எறிந்து கொண்டிருக்கும் தேன் பெருகியிருக்கும் செண்பக மலர்களின் நறுமணமோ வானுலகிலும் சென்று பரவும் வளம்மிக்கது எமது திரிகூடமலை என்கிறாள் அக்குறப் பெண்.

ஆடும் நாகப் பாம்புகள் கக்கும் நாகரத்தினங்கள் கோடி கோடியாகக் கிடந்து ஒளிபரப்பிக் கொண்டிருக்கும். வெண்ணிலவைத்தாம் உண்ணும் வெண்சோற்றுக் கவளமென நினைத்து, யானைகள் அதனை வழிமறித்து நிற்கும். வேடுவர் தினைப் பயிரினை விதைப்பதற்காகப் பண்படுத்தும் தினைப் புனங்கள் தோறும் அவர்கள் காட்டை அழித்து நெருப்பிடலால், வியப்பான அகில், குங்குமம், சந்தனம் முதலியவற்றின் நறுமணம் கமழ்ந்து கொண்டிருக்கும். காகமும் அணுகாத உயர்ந்த மலையுச்சிகளிலே மேகக் கூட்டங்கள் வந்து படிந்து கொண்டிருக்கும் என்றும் அம்மலை வளத்தைப் பாடி மகிழ்கிறாள் அக் குறப்பெண்.

வயிரக் கற்களும், மாணிக்கங்களும் விளைகின்ற மலையும் இந்த மலையேயாகும். வானத்துக் கதிரவன் மலைக்குகைகள் தோறும் நுழைந்து

நுழைந்து ஒளிபரப்பும் மலையும் இந்த மலையேயாகும் என்று அம்மலையின் மாண்புகளை வரிசைப்படுத்துகின்றார் திரிகூடராசப்பக் கவிராயர். எங்கள் குலத்தைத் தவிர வேறொரு குலத்தில் பெண் கொடுக்கவும் மாட்டோம்; பெண் கொள்ளவும் மாட்டோம்; எங்கள் சாதியினரை ஒருவர் உறவு பிடித்துக் கொண்டனர் என்றால் எந்நாளும் இந்த உறவைக் கைவிடவும் மாட்டோம் அத்தகு பெருமைக்குரிய குறவர் குலத்தவர் நாங்கள் என்பதை அக் குறப்பெண் பெருமிதம் பொங்கக் கூறுகின்றாள்.

மலைவளத்தின் மாண்பு

கோட்டுவளம் முலைகாட்டும் கொடியின் வளம்
இடைகாட்டும் குறிஞ்சி பூத்த
காட்டுவளம் குழல் காட்டும் மலைவளந்தான்
நீயுரைத்துக் காட்டு வானேன்
தோட்டுவளம் புரிகாதல் குற்றால
மலைவளமும் தோகையே!

என்னும் பாடலில் வசந்த வல்லியின் கூற்றாக மலைவளத்தின் மாண்பினைப் படம் பிடிக்கின்றார் திரிகூடராசப்பக் கவிராயர். யானைத் தந்தங்களினுடைய அழகினை உன் கொங்கைகள் காட்டும். பூங்கொடியின் நுண்மை வளத்தினை உன்னுடைய நுண்மையான இடையானது காட்டும். குறிஞ்சி மலர்கள் பூத்துள்ள காட்டின் வளத்தினை உன் கரிய கூந்தலானது காட்டிக் கொண்டிருக்கும். இப்படி உன் தோற்றமே மலைவளத்தின் மாண்பினைக் காட்டிக் கொண்டிருக்கும் போது நீ நின் வாயினால் உரைத்து அவற்றையெல்லாம் காட்டுவது எதற்காகவோ? எனக் குறத்தியின் அழகினை வசந்தவல்லி புகழ்ந்துரைக்கிறாள்.

மன்னும் இமயமலை எங்கள் மலையே என்று மார்தட்டியவன் பாரதி. என்றும் நிலைபெற்று விளங்கும் பெருமைக்குரிய மலை எங்கள் இமயமலை எனக் குறிப்பிட்டு இறும்பூது எய்துகிறான். இயற்கை வளங்களுள் முதன்மையானது மலை. ஒன்பது மலைகளுள் (நவரத்தினங்கள்) மாணிக்கம். வைரம், மரகதம், வைடூரியம் போன்ற பல மணிகள் மலைகளில் விளைகின்றன.

இயற்கை அரணாக விளங்குவதும், உயிரினங்கள் பல தங்கள் வாழ்விடமாகக் கொண்டிருப்பதும், ஊற்றுகள், அருவிகள், நீரோடைகள்

ஆகியவற்றின் தோற்றத்துக்கு மூலமாக இருப்பதும், மழை பெய்வதற்கு முழு முதற் காரணமாக விளங்குவதும், இன்னோரன்ன பெருஞ்சிறப்புகளைக் கொண்டிலங்குவதும் மலையே ஆகும். மலையின் மாண்பினைத் தமது அழகின் சிரிப்பில் பாடும் பாரதிதாசன்,

அருவிகள் வயிரத் தொங்கல்
அடர்கொடி பச்சைப் பட்டே
குருவிகள் தங்கக் கட்டி
குளிர்மலர் மணியின் குப்பை
எருதின் மேல் பாயும் வேங்கை
நிலவுமேல் எழுந்த மின்னல்
சருகெலாம் ஒளிசேர் தங்கத்
தகடுகள் பார டாநீ !

என்று மலையில் அன்றாடம் நிகழ்ந்திடும் அழகிய காட்சிகளை எழிலோவியமாகத் தீட்டி மனம் களிக்கின்றார்.

கைபுனைந்தியற்றாக் கவின்பெரு வனப்பாய்த் திகழும் மலைகள் இயற்கைத் தாயின் ஈடிணையற்ற அருட்கொடை எனலாம். பயன் தருமரங்கள், பச்சிலை மூலிகைகள் நிறைந்த மலைகளோ அளக்கலாகா அறிவும் ஆற்றலும் துளக்கலாகா நிலையும் தோற்றமும் கொண்டவை என அறிஞர்களால் போற்றிப் புகழப் பெறுகின்றன.

புவிவெப்பமடைதலைத் தவிர்க்கவும், குறைக்கவும் காடுகளையும் மரங்களையும் அதிகப்படுத்துதல், காடுகள் அழிவதைத் தடுத்தல், சூரிய ஒளி மற்றும் காற்றாலைகளின் மூலம் மின் உற்பத்தியை அதிகப்படுத்துதல், நிலக்கரியைக் குறைவாகப் பயன்படுத்துதல் போன்றவற்றில் அதிகமான கவனம் செலுத்தப்பட வேண்டும் என்ற நிலைமை இப்போது உருவாகியுள்ளது.

அண்மைக் காலமாகப் புவி வெப்பமடைதல் மிகுந்து வருவதால் ஏற்படும் காலநிலை மாற்றத்தால் உலகம் அழியக்கூடும் என்னும் அச்சவுணர்வு எழுந்துள்ளது. எதிர்காலத்தில் பூமிப்பந்தில் மனித இனமே வாழ முடியாத சூழல் உருவாகும். பெட்ரோல், டீசல், நிலக்கரி, எரிவாயு போன்ற நிலத்தடியில் புதைந்து கிடக்கும் புதைப்படிவ எரிபொருட்களைப் பெருமளவு பயன்படுத்துவதால் அவற்றிலிருந்து கரியமில வாயு வெளியாகிறது. இதனால்

வளிமண்டலத்தில் கரியமில வாயுவின் அடர்த்தி அதிகமாகிக் கொண்டே செல்கிறது.

ஏறக்குறைய 300 ஆண்டுகளுக்கு முன்பு வளிமண்டலக் கரியமில வாயுவின் அடர்த்தி 275 PPM ஆக இருந்தது. இப்போது 389 PPM ஆக அதிகமாகியுள்ளது. (ஒரு PPM என்பது பத்து இலட்சத்தில் ஒரு பகுதியாகும்) கரியமில வாயு சூரிய வெப்பத்தைப் பிடித்து வைத்துக் கொள்ளும் ஆற்றல் வாய்ந்தது. புவியின் மேற்பரப்பு வெப்பமும் அதிகமாகிறது. கடந்த நூற்றாண்டில் வெப்பநிலையும் அதிகமாகியுள்ளது.

இதனால் புயல், வெள்ளம், வறட்சி போன்ற இயற்கைப் பேரழிவுகள் அளவுக்கு அதிகமாகத் தாக்குகின்றன. உலகில் இனி மனித இனம் தொடர்ந்து உயிர்வாழப் புவி வெப்பமடைவதை உடனடியாகத் தடுத்தாக வேண்டும். காடுகளை வளர்ப்பதும் மலைகளின் பாதுகாப்பை நிலைநிறுத்துவதும் இன்றியமையாத தேவையாகும். திரிகூட மலையின் சிறப்பினை எடுத்துரைப்பதற்காகவே எழுதப் பெற்ற சிற்றிலக்கியம் குற்றாலக் குறவஞ்சி ஆகும்.

முடிவுரை

குறவஞ்சியில் குற்றால நாதரின் சிறப்புகள் மிகுதியாகக் கூறப்பட்டிருப்பினும் அம்மலை வளத்தை ஒல்லும் இடமெல்லாம் திரிகூட ராசப்பக் கவிராயர் எடுத்துரைக்கின்றார். கற்பனை நயத்தோடும் இலக்கியச் செறிவோடும் குறவஞ்சி காட்டும் மலைவளம் நம் கண்முன் விரிகிறது. களிபேருவகை தருகிறது. இடியின் முழக்கத்தோடு வந்து கொண்டிருக்கும் கருமேகம் என்னும்படியாக யானைகளின் மேலிருந்து பெரிய பெரிய பேரிகைகளின் முழக்கங்கள் ஒரு பக்கமும் உடுக்கையின் முழக்கம் இன்னொரு பக்கமும் எழுகின்ற பேரொலியைப் பற்றியெல்லாம் குறிப்பிடும் திரிகூடராசப்பக் கவிராயர் படைத்துள்ள குறவஞ்சி காட்டும் மலைவளம் நெஞ்சை விட்டகலாப் பெருஞ்சிறப்பினது என்பதைக் கூறவும் வேண்டுமோ?

தமிழ் விருந்தில் திராவிட மொழிச் சிந்தனைகள்

முனைவர் பா. நேருஜி
மதுரை

இந்தியாவில் பற்பல மொழிகள் பேசும் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுள் வடநாட்டார் பேசும் மொழிகள் ஆரியம் என்றும் தென்னாட்டவரால் பேசப்படும் மொழிகள் திராவிடம் என்றும் வழங்கப்படுகின்றன. இதில் திராவிட மொழிகள் எனத் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு போன்றவை குறிப்பிடப்படுகின்றன. திராவிட மொழிச் சிந்தனைகள் குறித்து. ரா.பி. சேதுப்பிள்ளையின் தமிழ் விருந்து என்னும் நூல் அரிய பல கருத்துக்களை உள்ளடக்கியுள்ளது. அதில் தமிழ்க் கலைகளின் தன்மை, தமிழ் இலக்கியத்தின் சீர்மை, தமிழ் மொழியின் செம்மை, தமிழரது வாழ்க்கையின் மேன்மை ஆகிய நான்கு பெரும் கூறுகள் இடம்பெற்றுள்ளன. இவ்ஆய்வுக் கட்டுரை தமிழ் மொழியின் செம்மைப் பகுதியில் தமிழ் மொழியும் பிற மொழியும் என்னும் உள்ளுறையில் இடம் பெற்றுள்ள திராவிட மொழிச் சிந்தனைகளை எடுத்துரைப்பதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

திராவிட மொழிச் சொற் சிந்தனைகள்

திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு போன்றவை தமிழ்த் தாயின் பிள்ளைகள் என வாதிப்பர் சிலர். தென்னிந்திய மொழிகள் எல்லாம் ஓர் இனம், ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மொழிகள் என்று கூறி அமைபவரே பலர் என்று கூறப்படுகின்றது.

தமிழில் வீடு, இல், மனை, அகம் என்பவற்றிற்குப் பொருள் ஒன்றே. இதில் தமிழில் உள்ள மனை என்ற சொல் கன்னடத்தில் இடம் பெற்றும் தெலுங்கில் இல்லாமலும் உள்ளது. தெலுங்கில் இல் என்பது இல்லு என்றும் இல்லாள் என்பது இல்லாலு என்றும் வழங்கப்படுகின்றன. அகம் என்ற சொல் தமிழில் வீட்டைக் குறிக்கும். ஆனால், அகம் என்ற சொல் கன்னடத்திலும் தெலுங்கிலும் இல்லை.

தமிழில் முகில் என்பது மேகத்திற்கு ஒரு பெயர். இது தெலுங்கில் மொகிலு என்றும் கன்னடத்தில் முகில் என்றும் வழங்கப்படுகின்றது. இது துளு மொழியில் முகல் என்று உள்ளது. மஞ்சு என்பது வானத்திலே தவழும் வெண்மேகம் ஆகும். இது தெலுங்கு, மலையாளம், மற்றும் கன்னடத்திலும் அதே பொருளில் இடம் பெறுகின்றது. கார் என்பது கருமேகத்தைக் குறிக்கும். தெலுங்கும் கன்னடமும் கருமேகத்தைக் குறிப்பிடாது மழையைக் குறித்து நிற்கின்றன.

தமிழில் புயல் என்பது மழை மேகத்தைக் குறிக்கும் மற்றொரு சொல்லாகும். கொண்டல் என்பது நீர் கொண்ட கருமேகத்தைக் குறிக்கும். கொண்டலும், புயலும் பிற திராவிட மொழிகளில் இல்லை. மாரி என்பது மழையைக் குறிக்கும் பெயர்களில் ஒன்றாகும். இது தெலுங்கில் இல்லை. ஆனால் தெலுங்கில் வான் என்பது தமிழைப் போன்றே மழையைக் குறித்து நிற்கின்றது. சோனை என்பது இடைவிடாது பெய்யும் அடைமழை. இது தெலுங்கிலும் உண்டு. தூவானம் என்பது சிறுமழை. இது துவர என்றும் தூர என்றும் தெலுங்கில் வழங்கப்படுகின்றது.

குளம் என்பது குளிப்பதற்காக அமைந்தது. மடு என்பது ஆழமான நீர் நிலை இவை முறையே கொலுனு, மடுகு எனத் தெலுங்கில் உள்ளன. அங்காடி என்பது கடையைக் குறிக்கின்றது. இது பசார் எனத் தெலுங்கிலும் கன்னடத்திலும் உள்ளது. மலையாளத்தில் அங்காடி என்றே உள்ளது.

ஏட்டுத் தமிழில் எனக்கு, உனக்கு என்பவை வீட்டுத் தமிழில் னேக்கு, னோக்கு என்று வழங்கப்படுகின்றன. தெலுங்கில் அவனுக்கு என்பது வானிக்கி என்றும் அதனுக்கு என்பது தானிக்கி என்றும் உள்ளது. தமிழில் அதர் என்பதற்கு வழி என்று பொருள். அதுவே தெலுங்கில் தாரி என்றும் உரல் என்பது ரோலு என்றும் இலது என்பது லேது என்றும் இறப்பு என்பது ரேப்பு என்றும் தெலுங்கில் வழங்கப்படுகின்றன.

தமிழில் உள்ள பல சொற்கள் தெலுங்கிலும் கன்னடத்திலும் மலையாளத்திலும் இடம் பெற்றுள்ள நிலையினை அறியமுடிகின்றது. மேலும் திராவிட மொழிகளில் ஒரே பொருள் குறித்து நிற்காத சொற்களும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

காலம் குறிக்கும் சொற்கள்

தமிழ் மற்றும் தெலுங்கில் காலம் குறிக்கும் சொற்களுக்கு இடையேயான ஒற்றுமைகள் ஈங்கு எடுத்துரைக்கப்படுகின்றது. பகல் – பகலு, பட்டப்பகல் – பட்டப்பகலு, நேற்று என்பது நெருநல், நென்னல் என இலக்கியத் தமிழில் இடம் பெற்றுள்ளது. நென்னல் – நின்ன, நாளை – ரேப்பு, இறப்பு – ரேப்பு (கடந்தகாலம்) எனத் தெலுங்கில் வழங்கப்படுகின்றது.

பேச்சுத் தமிழுக்கும் தெலுங்கிற்கும் உள்ள ஒற்றுமை

பேசும் முறையில் தெளிவாகவும் உறுதியாகவும் பேசினால் அதனைத் தமிழில் செப்புதல் என்பர். செப்பு என்ற சொல் தெலுங்கில் பெரிதும் வழங்கப்படுகின்றது. சொல்லாடல் என்பது தமிழில் பேசுதல். இதனைத் தெலுங்கில் மாட்டாட என்றும் மாற்றம் என்பதனை மாட்ட என்றும் வழங்குவர்.

பேச்சுத் தமிழிற்கும் தெலுங்கிற்கும் பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. உருண்டைக் கட்டி என்பது உண்டைக் கட்டி, பருப்பு என்பது பப்பு (மழலைச் சொல் தமிழ்) என்றும் வழங்கப்படுகின்றன. தெலுங்கில் இதே போன்று பருப்பு – பப்பு, செருப்பு – செப்பு, நெருப்பு– நெப்பு, பருத்தி – பத்தி, மருந்து – மந்து என வழங்கப்படுகின்றன.

தெலுங்கில் ழகர இழப்பு

தெலுங்கு மொழியானது ழகரத்தைப் பழங்காலத்திலேயே இழந்துவிட்டதாகக் கூறப்படுகின்றது. எனவே, அழுத்து – அத்து, உழுந்து – உத்தலு, கொழுப்பு – கொவ்வு என வழங்கப்படுகின்றன.

தமிழ் ழகர இழப்பு

தமிழில் ழகரத்தின் உச்சரிப்பில் இழப்பு ஏற்படும் பொழுது குழந்தை – கோந்தை, தாழ்ப்பாள் – தாப்பாள், தொழும்பன் – தொம்பன், எழுந்திரு – எந்திரு என வழங்கப்படுகின்றன.

தெலுங்கில் ழகரம் டகரமாக மாறி ஒலித்தல்

சிறப்பெழுத்தாகிய ழகரம் பல தெலுங்குச் சொற்களில் டகரமாக

மாறியிருக்கின்றது. எழு – ஏடு, கோழி – கோடி, மேழி – மேடி, பவழம் – பவடம் இதே போன்று இன்னும் பல என்று குறிப்பிடப்பட்டுள்ளன.

றகரம் இரட்டித்தலில் ஒற்றுமை

பேச்சுத் தமிழிலும் தெலுங்கிலும் வல்லின றகரம் இரட்டித்துவரும் சொற்களில் பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. பேச்சுத் தமிழில் குற்றம் சாற்றினான் – குற்றம் சாட்டினான், ஒற்றுக் கேட்டான் – ஒட்டுக் கேட்டான், கழற்று – கழட்டு, சுழற்று – சுழட்டு என வழங்கப்படுகின்றன. இவ்வாறே தெலுங்கிலும் றகரம் டகரமாக மாறி கொற்று – கொட்டு, சுற்றம் – சுட்டமு, புற்று – புட்ட, ஊற்று – ஊட்ட, மாற்றம் – மாட்ட என்று வழங்கப்படுகின்றன.

ஆகவே, தமிழும் தெலுங்கும் வேறு மொழிகளாகக் காணப்படினும் அவற்றுள் அடிப்படையான ஒற்றுமையுண்டு என்பது இதுகாறும் கூறியவற்றால் ஒருவாறு விளங்கும்.

மலையாள மொழிச் சிந்தனைகள்

மலையாள தேசமாகிய கேரள நாடு (சேர நாடு) ஆதியில் தமிழ் நாட்டின் ஓர் அங்கமாகவும் தமிழ் மணக்கும் திருநாடாகவும் விளங்கியுள்ளது. இக்காலத்தில் தமிழும் மலையாளமும் தனித்தனி மொழிகளாகக் கருதப்படுகின்றன. எனினும் இவ்விரு மொழிகளுக்கிடையே நெருங்கிய பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன.

பேச்சுத் தமிழுக்கும் மலையாளத்திற்கும் உள்ள ஒற்றுமைகள்

தமிழ்	பேச்சுத் தமிழ்	மலையாளம்
ஒன்று	ஒன்னு	ஒந்நு
மூன்று	மூனு	மூநு
பன்றி	பன்னி	பன்னி
கன்று	கன்னு	கன்னு
குன்று	குன்னு	குன்னு
ஒன்பது	ஒம்பது	ஒம்பது
ஐம்பது	அம்பது	அம்பது

என வழங்கப்படுகின்றன.

தமிழ், மலையாள ஒற்றுமைகள்

அரிசி - அரி, எலும்பு - என்பு (இலக்கியத் தமிழ்), எலும்பு - எல், தகப்பன் - தமப்பன், வண்ணான் - மண்ணான் (மண் என்பது மலையாளத்தில் கழுவு) என்று வழங்கப்படுகின்றன. இதில், மண்ணான் என்பது தமிழில் வண்ணானாகத் திரிந்தது போலும் என்று கூறப்படுகின்றது. தமிழில் பூட்டைத் திறக்கும் கோல் - தாக்கோல், திறவுகோல் எனப்படுகின்றது. மலையாளத்தில் தாழைத் திறக்கும் கோல் - தாழ்க்கோல் எனப்படுகின்றது. இதே போன்று கூறை என்பது தமிழில் புடைவை. புடைவை கொடை என்பது புடகொட என வழங்கப்படுகின்றது.

தமிழிலும் மலையாளத்திலும் அரசன் - கோ, கோன், கோமான், இளவரசன் - இளங்கோ, கோயில் - அரண்மனை, ஆலயம் என்றும் தமிழில் தம்பிரான் - கடவுள் என்றும் மலையாளத்தில் அரசர் குலத்தைச் சேர்ந்தார் என்றும் வழங்கப்படுகின்றன. மேலும் தமிழில் கா என்னும் சோலையானது மலையாளத்தில் காவு என்றும் ஐயனார், சாத்தன் என்பவை ஐயப்பன் என்றும் வழங்கப்படுகின்றன.

இதன் வாயிலாகத் தமிழுக்கும் மலையாளத்திற்கும் சொல்லாக்கத்தில் உள்ள ஒருமைப் பாட்டுத் தன்மை நன்கு வெளிப்படுகின்றது.

கன்னட மொழிச் சிந்தனைகள்

கருநாடக மாநிலத்தில் பேசப்படும் மொழி கன்னடம் எனப்படுகின்றது. இதில் கருநாடகம் என்னும் சொல்லே கன்னடம் என்றாயிற்று என்பர். மொழியடிப்படையில் பழங்கன்னடத்திற்கும் தமிழுக்கும் பல்வேறு வகையான ஒற்றுமைகள் காணப்பட்டுள்ளன. எ.கா. பூ, புல், புலி, பல்லி, பத்து ஆகியவை ஒரே ஒலிப்பு முறையில் வழங்கப்பட்டுள்ளன. இக்காலக் கன்னடத்தில் சில வேற்றுமைகள் காணப்படுகின்றன. எ.கா. பூ - ஹூவு, புல் - ஹூல்லு, புலி - ஹூலி, பல்லி - ஹல்லி, பத்து - ஹத்து என்பதில் ப என்ற பதத்திற்குப் பதிலியாக ஹ என்ற பதம் இடம் பெற்றுள்ளது.

தமிழ், கன்னடம் ஒற்றுமைகள்

தமிழ், கன்னடம் ஆகியவற்றில் பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. திங்கள் - சந்திரன், சந்திரனுக்குரிய நாள் - திங்கட்கிழமை, திங்கள் - மாதம்,

நிலவின் ஒளி - திங்கள் விளக்கு, கரைதல் - அழைத்தல் என இடம் பெற்றுள்ளன.

பேச்சுத் தமிழில் ஒருவன் என்பது ஒருத்தன் எனப்படுகின்றது. இதில் ஒருத்தன் என்பதற்கு எதிர்ப்பதமாக ஒருத்தி உள்ளது. ஆனால் ஒருவனுக்கு எதிர்ப்பதமாக ஒருவள் என்பது தமிழ் அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆனால், கன்னடத்தில் ஒருவன் என்பது ஒப்பனு என்றும் ஒருத்தி என்பது ஒப்பளு என்றும் வழங்கப்படுகின்றன. இதனடிப்படையில் ஒருவள் என்னும் பதம் தமிழின் நீர்மைக்கு மாறுபட்டதன்று. எனவே, அதனை ஏற்றுக் கொள்வதில் குற்றமொன்றும் இல்லை என்று வலியுறுத்தப்படுகின்றது.

எருது என்ற சொல் பழங்கன்னடத்தில் ஏர்து எனப்படுகின்றது. வெங்காயம் என்ற சொல் உள்ளி எனத் தமிழ் மற்றும் கன்னடத்தில் வழங்கப்படுகின்றன. மேலும், ஈருள்ளி - ஈர வெங்காயம் என்றும் வெள்ளுருள்ளி – வெள்ளை வெங்காயம் என்றும் வழங்கப்படுகின்றன. இதில் நீருள்ளி நாளடைவில் ஈருள்ளியாயிருத்தல் வேண்டும் என்று கூறப்படுகின்றது.

வண்டி என்பது பண்டி எனத் தமிழ், கன்னடம், தெலுங்கு ஆகியவற்றில் இடம் பெற்றுள்ளது. யான், நான் என்ற தன்மை ஒருமைப் பெயர்களுக்கு நிகரனாகக் கன்னடத்தில் யான், நானு என்பவை வழங்கப்படுகின்றன. இதில் யான் முற்காலச் சொல்லாகவும், நானு பிற்காலச்; சொல்லாகவும் குறிப்பிடப்பட்டுள்ளன. நீ என்ற முன்னிலை ஒருமைப் பெயர் கன்னடத்தில் நீன் என்று வழங்கப்படுகின்றது. பேச்சுத் தமிழில் நானு, நீனு என வழங்கப்படுகின்றன. இதில் நீனு என்பது தமிழில் கொச்சை மொழி எனக் கற்றோரால் கருதப்படுகின்றது. ஆனால், கன்னடத்தில் நீன் என்பது நல்ல சொல்லாகும்.

ழுகரம் ஒழிந்த நிலை

திராவிட மொழிகளுக்குரிய சிறப்பெழுத்தாகிய ழுகரம் கன்னடத்தில் பொது ளகரமாக மாறிவிட்டதாகவும் பல பதங்களில் ழுகரம் நழுவி ஒழிந்ததாகவும் கூறப்படுகின்றது. உழுந்து – உத்து, கொழுப்பு – கொப்பு, கழுத்து – கத்து, தொழுநோய் – தொன்னு

கன்னடம், தெலுங்கு ஒற்றுமை

கன்னடத்திலும் தெலுங்கிலும் பல்வேறு ஒப்புமையுடைய ஒலிக்குறிப்புச் சொற்கள் ஒரே பொருள் பொதிந்து வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழ்	கன்னடம்	தெலுங்கு
பருப்பு	பப்பு	பப்பு
மருந்து	மத்து	மத்து
எருமை	எம்மே	எம்மே
பருத்தி	பத்தி	பத்தி
பெரும்புலி	பொப்புலி	பொப்புலி

இதில் வேங்கைப் புலி என்பது தமிழில் பெரும்புலி எனப்படுகின்றது.

சகரம் ககரமாகிய நிலை

தமிழில் உள்ள சகரம் கன்னடப் பதங்களில் ககரமாகத் திரிந்து காணப்படுகின்றது. செவி – கிவி, செவிடு – கிவிடு, செந்தளிர் – கெந்தளிர், செம்பருத்தி – கெம்பருத்தி என்று வழங்கப்படுகின்றன.

வகரம் பகரமாகிய நிலை

தமிழ்ச் சொற்களின் முதலில் உள்ள வகரம் கன்னடப் பதங்களில் பகரமாக மாறி ஒலிக்கப்படுகின்றது. வீடு – பீடு, வீதி – பீதி, வில் – பில்லு, வேர் – பேரு என்று வழங்கப்படுகின்றன.

இத்தகைய மாற்றங்களை உணர்ந்து கொண்டால் தமிழுக்கும் கன்னடத்திற்கும் உள்ள நெருங்கிய தொடர்பு நன்கு விளங்கும்.

தமிழ் துளு ஒற்றுமை

கன்னடத்தோடு நெருங்கிய தொடர்புடைய மொழி துளுவம். ஆயினும் கன்னடத்தில் காணப்படாத சில சொற்கள் தமிழிலும் துளுவத்திலும் வழங்கி வருகின்றன. அத்தகைய சொற்களில் ஒன்று கொக்கு. தமிழில் கொக்கு என்பதும் துளுவத்தில் குக்கு என்பதும் மாமரத்தைக் குறித்து நிற்கின்றது.

தொகுப்புரை

தமிழும் தெலுங்கும் வெவ்வேறு மொழிகளாகக் காணப்படினும் அவற்றுள் அடிப்படையான ஒற்றுமைகள் காணப்படுகின்றன. தமிழுக்கும் மலையாளத்திற்கும் சொல்லாக்கத்தில் உள்ள ஒருமைப்பாட்டுத் தன்மை நன்கு வெளிப்படுகின்றது. தமிழுக்கும் கன்னடத்திற்கும் இடையேயான சொற்களின் ஒலிக்குறிப்பு மாற்றங்களை உணர்ந்து கொண்டால் அவற்றிற்கிடையேயான நெருங்கிய தொடர்பு நன்கு விளங்கிக் கொள்ளப்படுகின்றது. தமிழ் மொழிக்கும் பிற திராவிட மொழிகளுக்கும் உள்ள ஒற்றுமைகளைப் பகுத்தறிய முடிகின்றது. தென்னிந்திய மொழிகளெல்லாம் ஓர் இனம் என்பது தெளிவாகின்றது. திராவிட மொழிகளுள் தமிழ் மொழியானது காலப் பழமையும் செம்மையும் வாய்ந்ததென்பதனை ஐயமற விளங்கிக் கொள்ளும் வகையில் தம் கட்டுரையில் ரா.பி. சேதுப்பிள்ளை பதிவு செய்துள்ள திராவிட மொழிச் சிந்தனைகள் போற்றுதலுக்குரியது. திராவிட மொழிகளை ஆராய்ந்து திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் ஓர் உயரிய நூலை இயற்றியுள்ள கால்டுவெல் ஈங்கு ரா.பி. சேதுப்பிள்ளையுடன் நினைவு கூரத்தக்கவர். தமிழ் கூறும் நல்லுலகம் ரா.பி. சேதுப்பிள்ளையின் தமிழ்ப்பணியினை வியந்து பாராட்டி வருகின்றது.

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன் *பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.*
பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க *நெறிநின்றார் நீடுவாழ் வார்.*
தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால் *மனக்கவலை மாற்றல் அரிது.*

பசி

ஆறுவிரல் ஐம்பொறி
வீரசோழபுரம்

அறமெனப் படுவது யாதெனின் கேட்பின்
மறவாது இதுகேள் மன்னுயிர்க் கெல்லாம்,
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
கண்டது இல்... மணிமேகலை – 25. 228–231.

இம்மணிமேகலைச் செய்யுளின் வழி மனிதனின் உயிர் நாடி உணவு, உடை, உறையுள் என்பதை அறியலாம். இம்மூன்றனுள் உணவின்மையால் தோன்றுவது பசி. பசி வந்திடப் பத்தும் பறந்து போம் என்பது பழமொழி. பசி வந்தால் பறந்து போகக் கூடிய ஆறினை மணிமேகலை (1.76-80)யும் மொழிகிறது.

குடிபிறப் பழிக்கும் விழுப்பம் கொல்லும்
பிடித்த கல்வி பெரும்புனை விடூஉம்
நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி என்னும் பாவி.

பசிப்பிணியை நீக்க உண்டி கொடுத்தலே உயர்ந்த அறமாகும். மணிமேகலையில் அமுதசுரபி என்னும் கற்பனைப் பாத்திரம் தோன்றியது இதனாலன்றோ. கோதானம், பூதானம் முதலிய தானங்கள் (அடிப்படையை நோக்கும் போது) உணவின் பொருட்டே வழங்கப்படுதலால் அன்னதானமே மற்ற தானங்கள் அனைத்திலும் உயர்ந்தது என்பது புலனாகிறது.

நல்லுணவால் கண் பார்வையும் இரத்தமும் பெருகுவதால் கண் தானம், இரத்த தானம் முதலிய தானங்களை விட அன்ன தானமே உயர்ந்தது என்பதும் புலனாகிறது.

மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே என்பது எத்துணை உண்மை.

திருவள்ளுவர் பசி என்ற சொல்லைப் பொருட்பாவில் நான்கிடங்களிலும், அறத்துப்பாலில் நான்கிடங்களிலும் அமைத்துள்ளார். கொடுப்பதற்கு அறப்பண்பும் பொருட் செல்வமும் தேவை என்பதை இது புலப்படுத்துகிறது. இன்பத்தில் பசி இல்லை என்பதை சொல்லவும் வேண்டுமோ.

1. ஈன்றாள் பசிகாண்பாள் ஆயினுஞ் செய்யற்க
   சான்றோர் பழிக்கும் வினை. (குறள் - 656)
2. உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
   சேரா தியல்வது நாடு. (குறள் - 734)
3. ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை
   பெருஞ்செல்வம் உற்றக் கடை. (குறள் - 837)
4. அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
   துய்க்க துவரப் பசித்து. (குறள் - 944)

1. விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
   உள்நின் றுடற்றும் பசி. (குறள் - 13)
2. அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
   பெற்றான் பொருள்வைப் புழி. (குறள்- 226)
3. பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்
   தீப்பிணி தீண்டல் அரிது. (குறள்- 227)
4. ஆற்றுவா ராற்றல் பசியாற்றல் அப்பசியை
   மாற்றுவா ராற்றலிற் பின். (குறள் - 225)

குறள் எண் 225ல் ஈரிடங்களில் பசி என்ற சொல் அமைந்துள்ளதை நோக்குக.

தன்னுடைய பசியைப் பொறுத்துக் கொள்ளும் ஆற்றல் ஒன்று. பிறர் பசியை உண்டி கொடுத்து மாற்றும் ஆற்றல் (வல்லமை) ஒன்று. இவ்விரண்டு ஆற்றல்களிலும் பின்னர் கூறிய ஆற்றலையே மிகச் சிறந்த ஆற்றல் என்று பொய்யாமொழி புகன்றுள்ளார். அவர்வழி நின்று உண்டி கொடுத்து பிறர் பசி மாற்றி சிறந்த ஆற்றல் உடையவராக வாழ்வோமாக.

திருவள்ளுவரும் திருமூலரும் காட்டும் அன்பு நெறி

பா. இளவரசி
மதுரை

முன்னுரை

அவனியில் பிறக்கும் மனிதன் முதன் முதலில் அன்னையின் அணைப்பிலும், தொடு உணர்விலும், உணரும் இயற்கை உணர்வே அன்பு. இவ்வன்பு மனிதனுக்கு மட்டுமின்றி விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் கூட உண்டு. ஆனால் மனிதனின் அன்பு மண்ணில் மடியும் வரை தொடரும். விலங்குகள், பறவைகளின் அன்பு குறிப்பிட்ட காலகட்டத்தில் மறந்து மறைந்து விடுகிறது. காரணம் மனிதன் எதனையும் பகுத்து உணரும் ஆறாவது அறிவையும் பெற்றவன். விலங்குகளும், பறவைகளும் ஐயறிவினவே. நான் என்ற தன்னலம் மாறி நாம் என்ற பொதுநலம் உருவாகும் போது அன்பின் எல்லை அளவிடற்கரியது. அன்பின் வழியது உயிர்நிலை என்று திருவள்ளுவரும் அன்பே சிவம் என்று திருமூலரும் சுட்டிய அன்பின் சிறப்பினையும் அவர் காட்டிய வழிகளையும் ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அன்பு = அல் + பு எனப் பிரிபடும். எனவே அன்பு என்பதன் பொருள், அல்லாமை என்பதாகும். அன்பு செய்வார், அன்பு செய்யப்படுவார் என்ற இருவருக்கும் இடையே, அன்பு செய்வாரிடம் தோன்றும் உள்ள நெகிழ்ச்சியின் பரிணாமம் (பால் திரிந்து தயிராவது போன்று மாற்றுநிலை எய்துதல்) ஆகிய இரக்கம், அன்பு செய்யப்படுபவரிடம் செயல்படும் நிலையே அன்பு நிலையாகும்.

தாம் வேறு, தம்மால் அன்பு செய்யப்படுபவர் வேறு என்ற இரண்டுருவம் அன்பு செய்வாருக்குத் தோன்றாது ! அன்பு செய்யப்படுபவருடைய ஓர் உருவமே தோன்றும். எனவே அன்பு என்பது தான் அல்லாமை, தான் அற்று நிற்கும் நிலைமை என்று பொருள் கொள்ளலாம். இறையன்பு என்று சொல்லப்படும்போது தான் அது (இறை) ஆகும் நிலைமை அல்லது அதுதான் ஆகும் நிலைமை எனப் பொருள்படுகிறது. இதனையே வடநூலார் பக்தி என்று கூறுவர். பக்தி செய்வாருடைய எண்ணமெல்லாம் பகவானுடைய வடிவமாக ஆகிவிடுவதே பக்தியாகும்.

மெய்யான அன்பு

மெய்யான அன்பு, மனத்தின் ஒரு நடுநிலையான நடுவுநிலைமைத் தன்மையாகும். எல்லாரையும் இணைந்து எல்லாரிடமும் ஊடுருவிப் பார்க்கின்ற உள்ளத்திலிருந்து எழும் - உந்து விசைதான் மெய்யான அன்பாகும். அஃது இயற்கையான நல்லுணர்வு. அனைத்து மாந்தர்களுடனும் ஒருவன் இணைந்து ஒன்றாகி வாழ்வதற்குரிய ஆற்றலைத் தரும் அகத்திறனே குறள் கூறும் அன்பாகும்.

திருமூலர் அன்பே சிவம் என்று சொல்லிடுவார். அன்பும் சிவனும் இரு வேறு பொருள்கள் என்று கூறுவார், மெய்யுணர்வு கைவரப் பெறாதார். மெய்ம்மையாக நோக்கின் அன்பாகிய திருவருளே இன்பாகிய சிவனுக்குத் திருமேனியாகும் என்று உரைப்பார்.

அன்பு நெறியும் அறிவு நெறியும்

வடநூலார் பக்தி மார்க்கம், ஞானமார்க்கம் என்று கூறுவனவே தமிழில் அன்புநெறி, அறிவு நெறி என்று சொல்லப்படுகின்றன. அவர்கள் கூறும் கர்ம மார்க்கம் என்பது தொண்டு நெறியாகும். இது தமிழில் அன்புநெறியில் அடங்கும்.

கற்றார்க்கும் கல்லார்க்கும் ஒருங்கே பயன்படும் நெறி அன்பு நெறியேயாகும். எல்லா ஆற்றலும் உடைய கடவுள் தம் உண்மை அன்பால் வேண்டுவோர்க்கு வேண்டும் வடிவுடன் எதிரே வந்து காட்சியளித்து, வேண்டுவன தந்து உலகில் புகழுடன் வாழச் செய்து, வாழ்க்கை முடிவில் வீடுபேறும் அருளவல்லது என்ற முழு நம்பிக்கையுடன் அன்பராயினார் மேற்கொள்ளும் நெறியே அன்பு நெறியாகும்.

பூனைக்குட்டி ஒன்று, கிடந்த இடத்தில் கிடந்தபடியே தன் தாயை நினைத்து கூடவா நிற்க. அதன் தாய் அஃதிருக்கும் இடத்தைத் தானே நாடிவந்து, அதனைத் தன் வாயால் கவ்வித் தூக்கி நிறுத்திப் பாலூட்டிக் காப்பது போன்றது அன்பு நெறி. இங்குப் பூனை இறைவன். அன்புநெறி நிற்பவர் பூனைக்குட்டி. பூனைக்குட்டியின் நல்வாழ்விற்கு முழுப்பொறுப்பு தாய்ப்பூனையே. அன்பு நெறி ஒழுகுவார்க்கு இன்பம் பெற முழுப் பொறுப்பு இறைவனே.

நான் யார்? என்னைப் படைத்தவன் யார்?படைத்தவன் இறைவன் ஆனால் அவன் எங்கு இருக்கிறான்? என்று விவேகானந்தரைப் போன்று பல கேள்விகள் கேட்டுத் தம் அறிவால் விடை கண்டு, தம் முயற்சியால் வீடுபேறு அடையப் புலவர்கள் மேற்கொள்ளும் நெறியே அறிவு நெறியாகும்.

குரங்குக் குட்டி ஒன்று, தன் தாயின் உடலைத் தன் கைகளாலும், கால்களாலும் சேர்த்தணைத்து, இறுகப் பற்றிக் கொண்டு, அது தாவிச் செல்லும் இடங்களுக்கெல்லாம் தானும் உடன் செல்வதை ஒத்ததாகும் அறிவுநெறி.

இங்கு குரங்குக் குட்டி அறிவு நெறியைப் பின்பற்றுவார். இறைவன் தாய்க்குரங்கு. தாய் தாவிச் செல்லும் போது குட்டியின் பிடி நழுவினால் நிலை தடுமாறி விழும். இதில் தாயாகிய இறைவனுக்கு வேலை இல்லை. முழுப்பொறுப்பும் குட்டியைப் பொறுத்ததே.

ஆகவே இவ்விரு நெறிகளிலும் அன்பு நெறியே எளிய நெறி. அறிவு நெறி வலிய நெறி; அன்பு நெறி அன்பார் இறைவனையே கூவி அழைத்து அவனுடன் தான் ஒன்றிக் கொள்ளும் செயல். மக்கள் தொண்டு மகேசன் தொண்டு என அன்புநெறி நிற்போர் இறைவனை இகவாழ்வில் மக்களிடையே காணும் தன்மையைத் திருவள்ளுவம் காட்டுகிறது. இறைவனை அன்பு நெறியில் தழுவி, இடையறாது அவனுக்குத் திருநாவுக்கரசர் உழவாரப்பணி செய்தது போன்று பணி செய்து அவனுள் ஒன்றும் மேன்மையைத் திருமந்திரம் சுட்டுகிறது.

அன்பின் வெளிப்பாடு

மனிதனின் வாழ்வு உருண்டோடிவிடும் பணம் காசெனும் உருவமில்லாத பொருளால் உருவாகும் ஏற்றத் தாழ்வுகளை எதிர்நோக்குவதே. இவ்வாழ்வில் இன்புறும் போதும் கண்ணீர் வரும்; துன்புறும் போதும் கண்ணீர் வரும். இதில் தனக்காகக் கண்ணீர் விடாது பிறருக்காகக் கண்ணீர் விடும் போதுதான் உண்மை அன்பு வெளிப்படுகிறது. இக்கருத்தினைத் திருவள்ளுவர்,

> அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்
> புன்கணீர் பூசல் தரும் (குறள். 71)

என்ற குறட்பாவில் வழங்குகின்றார்.

ஒருவரது அன்பிற்கும் அதைப் பிறர் அறியாதவாறு அடைத்து வைக்கும் தாழ்ப்பாள் உளதோ? அன்பு செய்யப்பட்டாரது துன்பங் கண்டவிடத்து அன்புடையாரின் துன்புறுங்கண் சிந்தும் நீரே அவர் உள்ளத்திலுள்ள அன்பை எல்லாரும் அறியப் பறைசாற்றிவிடும் என்று தேவநேயப் பாவாணர் உரை தருவர்.

கண்கள் பிறர் இன்னல் கண்டு அழுதாலும் நீர் சிந்தும், பேரின்பம் வேண்டி இறைவனைத் தொழுதாலும் நீர் சிந்தும் என்பதைத் திருமூலரின் கீழ்வரும் பாடல் உணர்த்துகிறது.

அன்புள் உருகி அழுவன் அரற்றுவன்
என்பும் உருது இராப்பகல் ஏத்துவன்
என்பொன் மணியை இறைவனை ஈசனைத்
தின்பன் கடிப்பன் திருத்துவன் தானன்றே (திருமந்திரம் : பாடல் 2938)

திருவருள் நினைவால் நீங்கா தோங்கும்
பேரன்பால் உள்ளுருகி இன்ப வேட்கைப் பெருக்க
இயல்பாம் இனிய அழுகையினைப் புரிவேன், அழுது
குறையிரந்து முறையிடுதலாகிய அரற்றுதலைச் செய்வேன்
எலும்பும் உருகுமாறு இரவும் பகலும் இடைவிடாது தொழுது தூமலர்
தூவித் துதித்து நின்று அழுது காமுற்று அரற்றி
வணங்குவேன்

என்று பொருள் தருவர் இராமநாத பிள்ளை.

ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே
பாரம் ஈசன் பணியல தொன்றிலார்
ஈர அன்பினார்; யாதும் குறைவிலர்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ

என்னும் சேக்கிழார் பெருமானுடைய பாடலில் அன்பர்கள் ஆரமாக அணியும் கண்டிகைக்குத் தரும் விளக்கம் எண்ணி எண்ணிப் பெருமைபடத் தக்கது. விளக்கம் வருமாறு.

தம்முடைய துன்பம் கண்டு இரங்கிக் கண்ணீர்த் துளிகளைச் சிந்தித் தம்முடைய துன்பத்தைப் போக்குவதையே ஈசன் தனக்குத் தொழிலாக உடையவன் என்பதை நன்குணர்ந்த அடியவர்கள் அவனிடம் தம்முடைய நன்றியறிதலைக் காட்டுவதற்காக அவனுடைய கண்ணீர்த் துளிகளுக்கு அடையாளமாக இலங்கும் கண்மணிகளாம் உருத்திராக்கங்களின் கோர்வையான கண்டிகையையே விலை மதித்தற்கு அரிய ஆரமாக (மாலையாக) அணிவார்களாம்.

வள்ளுவம் வழங்குவது அன்பரின் கண்ணீர்த்துளி, திருமந்திரம் புகல்வது அடியவரின் கண்ணீர்த்துளி, பெரிய புராணம் பேசுவது ஆண்டவனின் கண்ணீர்த்துளி. இவை அனைத்திலும் இலங்குவது அன்பின் வெளிப்பாடே.

தன்னலமற்ற அன்பு

பிறருக்கு என்று வாழ்பவர்களே வாழ்பவர்கள். மற்றவர்கள் நடைப்பிணத்துக்குச் சமமானவர்களே. அன்பில்லாதவர் எல்லாப் பொருள்களையும் தமக்கே பயன்படுத்துவர். அன்புடையார் பிறர் பொருளை மட்டுமின்றித் தம் பொருளாகிய உடம்பையும் பிறருக்குப் பயன்படுத்துவர் என்னும் கருத்தில்,

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. (குறள் 72)

இகவாழ்வின் நலத்தினை இதயத்திலிருந்து விடுத்து எல்லோரும் இன்புற்றிருக்க எண்ணிச் சிவப்பெருமானிடம் இடையறாது அன்பு செய்து அதனால் நிறைந்த உள்ளத்தின்கண் அவன் திருவருள் பேரொளி மேலெழுந்து விளங்கும் என்னும் திருமூலரின் கருத்து.

அன்புறு இந்தையின் மேலெழும் அவ்வொளி
இன்புறு கண்ணியொ டேற்க இசைந்தனன் (திருமந்திரம் 269:102)

தம் உடம்பையும் உயிரையும் பிறருக்கு அளிக்கும் அன்புடையாருக்குச் சான்றாகச் சிபிச் சக்கரவர்த்தியையும் வள்ளல் குமணனையும் கூறல் சாலப் பொருந்தும்.

அன்பிலனாகிய தம்பி தமக்குரியதென்று நாட்டை ஆட்கொள்ள, அன்புடையனான தமையன் குமணன் நாடு விட்டுக் காடு சென்று தங்க நேர்ந்தது. அவனைத் தேடிச் சென்ற புலவர் பெருந்தலைச் சாத்தனார் அவன் அன்புள்ளத்தைப் பாடி மகிழ, அதைக் கேட்ட குமணன் தான் கைப்பொருள் ஒன்றும் இல்லாதவனாக இருந்தபோதும் தன் தலையை வெட்டிக் கொண்டு போய்த் தம்பியிடம் கொடுத்துப் பெரும் பொருள் பெறுமாறு வாளினைத் தந்தமையை,

பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தலென்
நாடிழந் ததனினு நனியின் னாதென
வாள்தந் தனனே தலையெனக் கீயத்
தன்னிற் சிறந்தது பிறிதொன் றின்மையின் (புறம் 165 :10-14)

அடைக்கலமென வந்த புறாவிற்காகத் தன் தசையையும் உடம்பையும் அளித்த சோழ வேந்தன் சிபியின் வரலாறும் இங்கு நோக்குதற்குரியது.

இவர்களுக்கெல்லாம் மேலாக வேடன் கண்ணப்பன் சிவலிங்க வடிவமான குடுமித் தேவருக்கு நாள்தோறும் உணவு (இறைச்சி) தேடி வந்து குழைத்து குழைத்து ஊட்டினன், ஒருநாள் அவர் ஒரு கண்ணிலிருந்து குருதி கொப்புளிக்கக் கண்டு, தன் கண்ணைக் கூரிய அம்பால் பெயர்த்து எடுத்து சிவனுக்கு அப்பினன், அப்பொழுது மறுகண்ணிலிருந்து கொப்புளிக்க உடனே தன் மறுகண்ணையும் பெயர்த்தெடுக்க முனைந்த கண்ணப்பரின் இறையன்பு போற்றற்குரியது.

அன்பின் பயன்பாடு

அன்பு ஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு. (குறள். 74)

அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு. (குறள். 75)

என்னும் இரு குறட்பாக்களிலும் அன்பின் பயனை நாயனார் நவில்கிறார்.

உறவினரிடத்துச் செய்யும் அன்பு ஒருவனுக்குப் பிறரிடத்தும் விருப்பத்தை உண்டாக்கும். அது நாளடைவில் எல்லோரையும் நட்பாக்கி எல்லாப் பொருள்களும் எளிதாய்க் கிடைக்கக் கூடிய நல்ல நிலைமையை உண்டு பண்ணும். அதுமட்டுமின்றி இல்லற வாழ்வில் அன்பொடு பொருந்த வாழ்ந்தவர் இவ்வுலகில் மட்டுமின்றித் தேவருலகிலும் பேரின்பம் பெறுவர் என்பதே வள்ளுவர் கூற்றாகும்.

அன்பின் பயன்பாட்டைத் திருமூலர்,

அன்புடனே னெறின் றமுதமும் ஏற்றியே
பொன்செய் விளக்கும் புகைதீபம் திசைதொறும்
துன்பம் அகற்றித் தொழுவார் நினையுங்கால்
இன்புட னேவந் தெய்திடும் முத்தியே (திருமந்திரம் : பாடல் 1981)

உள்ளன்புடன் படைப்பினைக் குழைத்து, விளக்கம் மிக்க. திருவிளக்குகள் எல்லாப் பக்கங்களிலும் ஏற்றுக : புகையும் ஒளியும் காட்டி வழிபடுக. இனம் பற்றி மணியும் இமயமும் இயம்புக ; செந்தமிழ் மாமறைத் திருமுறை ஓதுக. இத்தகைய தொழுகையர் நினையுங்கால் திருவடிப் பேற்றின்பம் உடனே கைகூடும் என்பதில் திருவடிப் பேற்றின்பம் அடியார்க்குக் கிடைக்கும் அன்பின் பயன்பாடு என்று உணர்த்தப்படுகிறது.

முடிவுரை

திருவள்ளுவரின் அன்பு நெறி, தம்மை மறந்து பிறர் நலத்திற்காகப் பாடுபடும் மக்களில் இறைவனைக் காணும் நெறி. ஆனால் திருமூலரின் நெறி, தன்னை மறந்து இறைவனோடு ஒன்றி நிற்கும் அடியாராக மாறி இறைவனே தானாக நிற்கும் நிலையைக் காணும் அறிவு நெறி. அன்புநெறி யாவரும் எளிதாகச் செல்லக்கூடிய வண்டிப்பாதை ; அறிவு நெறி கரடுமுரடான காட்டுப்பாதை. உலகில் உயிர்கள் அன்பு, உண்மை, அறிவு, இன்பம் ஆகியவற்றைப் பற்றுக் கோடாகக் கொண்டு வடிவம், பெயர்களை எடுத்து வாழ்வு நடத்துகின்றன. இதில் அன்பையும் உண்மையையும் பற்றுக்கோடாகக் கொண்டு தன் வாழ்நாள் முழுமையையும் மக்களுக்காகச் சேவை செய்து அழியாப் புகழை நாட்டியவர் அண்ணல் காந்தி. அன்பையும் அறிவையும் பற்றுக்கோடாகக் கொண்டு மக்கள் தொண்டே மகேசன் தொண்டென்று மக்களுக்காகத் தொண்டாற்றித் தொல்லுலகில் என்றும் நிலைத்திருப்பவர் சுவாமி விவேகானந்தர். இருவருமே அன்பினால் மக்களை ஆண்டவர்களே என்பது நினைவு கூர்தலுக்குரியது.

வாசகர் வாசகம் ②

மதிப்புமிகு ஆசிரியர் அவர்களுக்கு, வணக்கம்.

செப்டம்பர் 2012 செந்தமிழ் இதழில் தமிழ் ஆங்கிலம் - உடம்படு மெய்கள் என்னும் தலைப்பில் என் கட்டுரை வெளியாயிற்று. அப்போதிருந்தே அக்கட்டுரையில் வெளியான பொருள் பற்றியும், அதை முன் வைத்து வெளிச்சென்று பிற தடைகள் எழுப்பி அவை குறித்தும் விவாதங்கள் தொடர்கின்றன. ஆகஸ்டு 2013 இதழ்க் கட்டுரை அண்மை வரவு இனியும் நீளலாம். காத்திருப்போம்.

அறிஞர்களின் கருத்துப் பரிமாறல்களில் ஏனைய செந்தமிழ் அன்பர்களைப் போன்றே நாமும் தெளிவு பெறுகிறோம். நமக்குள்ள முடிபுகளில் உறுதியும் கொள்கிறோம். தொல்காப்பியம் முதனூல். நன்னூல் வழிநூல். வேண்டும் விகற்பம் கூறி வழி நூல் யாத்தல் பின்னோர் நெறியே. மொழி எளிமை நோக்கி வளர்கிறது. புத்திலக்கியங்கள் போலவே புத்திலக்கணங்களும் தேவைப்பட்டன. இன்றும் தேவை உள்ளது.

உருபு கொளல் வரையார் என்றது நுட்பம் தான். எல்லா மொழிக்கும் என்றதைக் கூட உயிரீற்று மொழி என உரைகாரர் துணை கொண்டே அறிய நேர்வதால் அதுவும் நுட்பமே ஆகுக. ஆயின், விதந்தோதியமை குன்றக் கூறலானது முரண். ஞகர – நகரங்களை விடுத்ததே பவணந்தியார் செய்த குற்றம். ஒருக்கால் வேறு தரவில் இவற்றுக்கு அவர் வழி கண்டிருப்பார். முனைந்து பார்க்க வேண்டும். அவ்வளவே.

இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பலின்

பகுதி விகுதி பகுத்து இடை நின்றதை

வினைப்பெயர் அல்பெயர்க்கு இடைநிலை எனவே - (நன்னூல்-141)

ஞ,ந,ச,த,வ எல்லாவற்றுக்கும் உடம்படு மெய் என்ற பெயரில்லாமல் இடைநிலை என்ற பெயரில் இடந்தந்துள்ளார். அவை முதலியவற்றையும் அவ்+அணி, இவ்+ஆடை என வருவனவற்றையும் அவை முதலாகிய வகரப் பெயர் என்றே தொல்காப்பியர் (தொல். சொல்-167) குறிப்பிட்டுள்ளதை இத்தொடர்பில் கருத வேண்டும். விவாதப் பொருளாக இதனையும் கொள்ளலாம்.

தொண்ணூறைக் கடந்தும் நெருங்கியும் வாழும் பெற்றோர்ப் பேணும் பொறுப்பிலுள்ளேன். விரைந்து வேறொரு பொருளில் கருத்துகளை முன் வைப்பேன்.

புலன்சான்ற ஆய்வேடுகள் கைக் கொண்டு பொருதும் அறிஞர் பாராட்டுக்குரியர். சங்கப் பலகை வழங்கும் செந்தமிழும் நன்றிக்குரித்து.

அன்புடன், **வெ. பெருமாள்சாமி,** சென்னை

ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா

தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615

பதிப்பாசிரியர் : **இரா. அழகுமலை,** எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No. 5508/57 October 2013 MA/130/2011-2013

Posted at Madurai BPC on 25th of every month

செந்தமிழ்க் கல்லூரி

மதுரைத் தமிழ்ச் சங்கம்

[தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது]

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை – 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

முனைவர் மு. மீனா
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

இரா. குருசாமி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,

செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை – 625 001

From

SECRETARY
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by V. Govindarajan, published by R. ALAGUMALAI M.A., M.Phil. on behalf of Madurai Tamil Sangam, Madurai and printed at Davam Printers, 32, West Masi Street, Madurai - 1, and published at 54, Tamil Sangam Road, Madurai. Editor R. ALAGUMALAI M.A., M.Phil.